# மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழு – பதவி வெற்றிடங்கள்

## (கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு)

TVEC

1990 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்விச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்டு, 1999 ஆம் ஆண்டின் 50ஆம் இலக்க (திருத்தம்) சட்டத்தின் கீழ் சட்டபூர்வமான அமைப்பாக மீளத்தாபிக்கப்பட்ட மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழு, தொழில்நுட்ப மற்றும் தொழிற்கல்வி மற்றும் பயிற்சித் துறையில் கொள்கை செயலாக்கம், திட்டமிடல், ஒருங்கிணைப்பு, தர உத்தரவாதம் மற்றும் அங்கீகாரம் ஆகிய பணிகளை முன்னெடுக்கும் ஒரு தேசிய ஒழுங்குபடுத்தல் நிறுவகமாகும்.இவ் ஆணைக்குழுவின் கீழ் வெற்றிடமாகவுள்ள உள்ள பதவிகளுக்கு தகுதியான நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இப்பதவிகளுக்கு தேர்ந்தெடுக்கப்படும் அலுவலர்கள் ஆணைக்குழுவின் எந்தவொரு பிரிவிலும் பணியாற்றும் தன்மை பெற்றவர்களாக இருக்க வேண்டும்.

### 1. பிரதிப் பணிப்பாளர் நாயகம் (HM 2-1) பதவிகளின் எண்ணிக்கை 01

**தகுதிகள்**
**வெளிவாரி விண்ணப்பதாரர்கள்**

(அ) இலங்கை பாராளுமன்ற சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட அல்லது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட உள்நாட்டு அல்லது வெளிநாட்டு பல்கலைக்கழகமொன்றில் பொறியியல்/ கல்வி/ பொருளாதாரம்/ முகாமைத்துவம்/ இயற்கை விஞ்ஞானம் ஆகிய ஏதாவதொரு பாடத்துறையில் இளநிலைப் பட்டம் (Bachelor Degree) பெற்றிருத்தல்

மற்றும்

(ஆ) இலங்கை பாராளுமன்ற சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட அல்லது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட உள்நாட்டு அல்லது வெளிநாட்டு பல்கலைக்கழகமொன்றில் பொறியியல்/ கல்வி/ பொருளாதாரம்/ முகாமைத்துவம்/ இயற்கை விஞ்ஞானம் ஆகிய ஏதாவதொரு பாடத்துறையில் முதுநிலைப் பட்டம் (Master Degree) பெற்றிருத்தல்

அல்லது

மேலே குறிப்பிடப்பட்டுள்ள பாடத்துறையில் பட்டத்திற்கு சமமான அதுசார்ந்த அங்கத்துவத்தை வழங்கும் பாராளுமன்றச் சட்டத்தால் தாபிக்கப்பட்ட ஒரு தொழில்முறை நிறுவகத்தில் பட்டய அங்கத்துவம் (Chartered Membershi) பெற்றிருத்தல்.

**அனுபவம்**
இளநிலைப் பட்டம் பெற்ற பிறகு தொழில்நுட்ப, தொழிற்கல்வி மற்றும் பயிற்சித் துறையில் மூத்த நிர்வாக (Senior Management) மட்டத்தில் ஐந்து (05) வருட அனுபவத்துடன் நிர்வாக மட்டத்தில் 20 வருட அனுபவமிருத்தல்

**உள்வாரி விண்ணப்பதாரர்கள்**

**தகுதிகள் மற்றும் அனுபவம்:**
(அ) வெளிவாரி விண்ணப்பதாரர்களுக்கான தகுதிகளை பெற்றிருத்தல்

அல்லது

(ஆ) மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவில் மூத்த நிர்வாக சேவை தரத்தில் (HM 1-1) பணிப்பாளராக ஐந்து (05)வருட திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல்

**பிற தகுதிகள் (பதவிக்குப் / சேவைக்குப் பொருத்தமான பிற தகுதிகள்)**

தாய்மொழி மற்றும் ஆங்கில மொழியை பிரயோகிக்கக்கூடிய ஆற்றல், கணினியைப் பிரயோகிக்கக்கூடிய ஆற்றல் Word Processing, Spread Sheet, Presentation ஆகிய மென்பொருட்களைப் பயன்படுத்தக்கூடிய ஆற்றல், மின்னஞ்சலூடாக தொடர்பாடல் மேற்கொள்ளக்கூடிய ஆற்றல் ஆகியவை மேலதிக தகுதிகளாகக் கருதப்படும்.

**சம்பள அளவை:**
ரூ.161,140 - 12X4,850 – ரூ.219,340
(2025.04.01 முதல் நடைமுறைக்கு வரும் முகாமைத்துவ சேவைகள் திணைக்கள சுற்றறிக்கை 01/2025 இற்கு அமைய இச்சம்பளம் வழங்கப்படும். 2025.04.01 திகதியன்று பெறும் மாத சம்பளம்: ரூ.119,494)

**வயதெல்லை:**
35 - 55 வயதுக்குள் இருக்க வேண்டும். உள்வாரி விண்ணப்பதாரர்களுக்கு அதிகபட்ச வயதெல்லை பிரயோகிக்கப்படமாட்டாது

### 2. பணிப்பாளர் (நிர்வாகம்) (HM 1-1) - பதவிகளின் எண்ணிக்கை 01

**தகுதிகள்**
**வெளிவாரி விண்ணப்பதாரர்கள்**

(01) பதவியுடன் தொடர்புடைய பாடத்துறையில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட தொடர்புடைய பாடத்துறையில் இளநிலைப் பட்டம் (Bachelor Degree) பெற்றிருத்தல.

மற்றும்

தொடர்புடைய பாடத்துறையில் முதுநிலைப் பட்டம் (Master Degree) பெற்றிருத்தல்/ பதவியுடன் தொடர்புடைய பாடத்துறைக்கு பொருத்தமான, அங்கீகரிக்கப்பட்ட பட்டய தொழில்முறை நிறுவகத்திலிருந்து இணை அங்கத்துவம் (Associate Membership) பெற்றிருத்தல்

அரச நிறுவகத்தில், அரச கூட்டுத்தாபனத்தில், நியதிச் சபையில், சட்டபூர்வமான நிறுவகத்தில் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவகத்தில் “நிர்வாக மட்ட” (Managerial) பதவிச் சேவையுடன் சம்பந்தப்பட்ட துறையில 15 வருட அனுபவம் பெற்றிருத்தல்

(02) பதவியுடன் தொடர்புடைய பாடத்துறைக்கு பொருத்தமான, அங்கீகரிக்கப்பட்ட பட்டய தொழில்முறை நிறுவகத்திலிருந்து முழு அங்கத்துவம் (Full Membership) பெற்றிருத்தல்

மற்றும்

அரச நிறுவகத்தில், அரச கூட்டுத்தாபனத்தில், நியதிச் சபையில், சட்டபூர்வமான நிறுவகத்தில் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவகத்தில் “நிர்வாக மட்ட” (Managerial) பதவிச் சேவையுடன் சம்பந்தப்பட்ட துறையில 15 வருட அனுபவம் பெற்றிருத்தல்

**உள்வாரி விண்ணப்பதாரர்கள்**
**(கீழே குறிப்பிடப்பட்ட 01 அல்லது 02)**

01.வெளிவாரி விண்ணப்பதாரர்களுக்கான தகுதிகளை பெற்றிருத்தல்

(ஆ) மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவில் நிர்வாக சேவையில் தரம் 1 இல் (MM 1-1) பிரதிப் பணிப்பாளராக ஐந்து (05) வருட திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல்

**பிற தகுதிகள் (பதவிக்குப் / சேவைக்குப் பொருத்தமான பிற தகுதிகள்)**

தாய்மொழி மற்றும் ஆங்கில மொழியை பிரயோகிக்கக்கூடிய ஆற்றல், கணினியைப் பிரயோகிக்கக்கூடிய ஆற்றல் Word processing, Spread Sheet, presentation ஆகிய மென்பொருட்களைப் பயன்படுத்தக்கூடிய ஆற்றல், மின்னஞ்சலூடாக தொடர்பாடல் மேற்கொள்ளக்கூடிய ஆற்றல் ஆகியவை மேலதிக தகுதிகளாகக் கருதப்படும்.

சம்பள அளவை: ரூ.140,640 - 15×4,100 – ரூ.202,140 (2025.04.01 முதல் நடைமுறைக்கு வரும் முகாமைத்துவ சேவைகள் திணைக்கள சுற்றறிக்கை 01/2025 இற்கு அமைய இச்சம்பளம் வழங்கப்படும். 2025.04.01 திகதியன்று பெறும் மாத சம்பளம்: ரூ.105,399)

வயதெல்லை:
35 – 55 வயதுக்குள் இருக்க வேண்டும். உள்வாரி விண்ணப்பதாரர்களுக்கு அதிகபட்ச வயதெல்லை பிரயோகிக்கப்படமாட்டாது

### 3. உதவிப் பணிப்பாளர் (MM 1-1) பதவிகளின் எண்ணிக்கை: 08

**வெளிவாரி விண்ணப்பதாரர்கள்**
(கீழே குறிப்பிடப்பட்ட 01 அல்லது 02 அல்லது 03)

(01) பதவியுடன் தொடர்புடைய பாடத்துறையில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட தொடர்புடைய பாடத்துறையில் இளநிலைப் பட்டம் (Bachelor Degree) பெற்றிருத்தல்

மற்றும்

பதவியுடன் தொடர்புடைய விடயத் துறையில் குறைந்த பட்சம் ஐந்து (05) வருட அனுபவம் பெற்றிருத்தல்

(02) பதவியுடன் தொடர்புபட்ட விடயத் துறையுடன் பொருந்தக்கூடிய அங்கீகரிக்கப்பட்ட பட்டய தொழில்முறை நிறுவகத்தில் இடைநிலை பரீட்சையில் சித்தியடைந்திருத்தல

மற்றும்

பதவியுடன் தொடர்புபட்ட விடயத் துறையில் குறைந்த பட்சம் ஐந்து (05) வருட அனுபவம் பெற்றிருத்தல்

(03) தொழில்நுட்பத் துறை தொடர்பான பதவிகளுக்கு மட்டும், மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்ப/தொழிற்பயிற்சி நிறுவகத்தால் வழங்கப்பட்ட NVQ மட்டம் 7 க்குக் குறையாத தேர்ச்சிச் சான்றிதழ் பெற்றிருத்தல்

மற்றும்

பதவியுடன் தொடர்புபட்ட விடயத் துறையில் குறைந்த பட்சம் ஐந்து (05) வருட அனுபவம் பெற்றிருத்தல்

**உள்வாரி விண்ணப்பதாரர்கள்**
(கீழே குறிப்பிடப்பட்ட 01 அல்லது 02)

(01) வெளிவாரி விண்ணப்பதாரர்களுக்கான தகுதிகளை பெற்றிருத்தல்

அல்லது

(02) மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவில் கனிஷ்ட நிர்வாக தரம் JM சேவையில் ஐந்து (05) வருடத்திற்கு குறையாத சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல்

**பிற தகுதிகள் (பதவிக்குப் / சேவைக்குப் பொருத்தமான பிற தகுதிகள்)**
தாய்மொழி மற்றும் ஆங்கில மொழியை பிரயோகிக்கக்கூடிய ஆற்றல், தகவல் தொழில்நுட்பத்தைப் பிரயோகிக்கக்கூடிய ஆற்றல்.

**சம்பள அளவை:**
ரூ.91,690 - 10×2,480 - 15×3,450 – ரூ.168,240
(2025.04.01 முதல் நடைமுறைக்கு வரும் முகாமைத்துவ சேவைகள் திணைக்கள சுற்றறிக்கை 01/2025 இற்கு அமைய இச்சம்பளம் வழங்கப்படும். 2025.04.01 திகதியன்று பெறும் மாத சம்பளம்: ரூ.71,730)

**வயதெல்லை:**
22 வயதுக்கு குறையாத 45 வயதுக்கு மேற்படாமல் இருக்க வேண்டும். உள்வாரி விண்ணப்பதாரர்களுக்கு அதிகபட்ச வயதெல்லை பிரயோகிக்கப்படமாட்டாது.

### 4. நிர்வாக அலுவலர் (JM 1-1) பதவிகளின் எண்ணிக்கை: 01

**தகுதிகள்**
வெளிவாரி விண்ணப்பதாரர்கள்

(அ) இலங்கை பாராளுமன்ற சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட அல்லது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட உள்நாட்டு அல்லது வெளிநாட்டு பல்கலைக்கழகமொன்றில் இளநிலைப் பட்டம் (Bachelor Degree) பெற்று சம்பந்தப்பட்ட துறை தொடர்பான ஒரு (01) வருட அனுபவமும் பெற்றிருத்தல்

அல்லது

மேலே குறிப்பிடப்பட்டுள்ள விடயத்துறை தொடர்பாக பட்டய தொழில்முறை அங்கத்துவம் வழங்கும் நிறுவகத்தில் இணை அங்கத்துவம் பெற்றிருத்தல்

**உள்வாரி விண்ணப்பதாரர்கள்**
(கீழே குறிப்பிடப்பட்ட 01 அல்லது 02)

(01) வெளிவாரி விண்ணப்பதாரர்களுக்கான தகுதிகளை பெற்றிருத்தல்
(இலங்கை பாராளுமன்ற சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட அல்லது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட உள்நாட்டு அல்லது வெளிநாட்டு பல்கலைக்கழகமொன்றில் இளநிலைப் பட்டம் (Bachelor Degree) பெற்று சம்பந்தப்பட்ட துறை தொடர்பான ஒரு (01) வருட அனுபவமும் பெற்றிருத்தல்

அல்லது

மேலே குறிப்பிடப்பட்டுள்ள விடயத்துறை தொடர்பாக பட்டய தொழில்முறை அங்கத்துவம் வழங்கும் நிறுவகத்தில்இணை அங்கத்துவம் பெற்றிருத்தல்)

(02) மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவில் முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்பம் அல்லாத) (MA 1) பிரிவு தரம் II இலுள்ள சம்பந்தப்பட்ட துறைக்கான பதவியில் குறைந்தபட்சம் ஐந்து (5) வருட திருப்திகரமான சேவைக்காலத்தை பூர்த்தி செய்திருத்தல்

**பிற தகுதிகள் (பதவிக்குப் / சேவைக்குப் பொருத்தமான பிற தகுதிகள்)**

தாய்மொழி மற்றும் ஆங்கில மொழியை பிரயோகிக்கக்கூடிய ஆற்றல், கணினியைப் பிரயோகிக்கக்கூடிய ஆற்றல் Word Processing, Spread Sheet, Presentation ஆகிய மென்பொருட்களைப் பயன்படுத்தக்கூடிய ஆற்றல், மின்னஞ்சலூடாக தொடர்பாடல் மேற்கொள்ளக்கூடிய ஆற்றல்.

**சம்பள அளவை:**
ரூ. 72,650 – 10×1,360 – 18×2,040 – ரூ.122,970 (2025.04.01 முதல் நடைமுறைக்கு வரும் முகாமைத்துவ சேவைகள் திணைக்கள சுற்றறிக்கை 01/2025 இற்கு அமைய இச்சம்பளம் வழங்கப்படும். 2025.04.01 திகதியன்று பெறும் மாத சம்பளம்: ரூ.58,615)

**வயதெல்லை**
22 வயதுக்கு குறையாத 45 வயதுக்கு மேற்படாமல் இருக்க வேண்டும். உள்வாரி விண்ணப்பதாரர்களுக்கு அதிகபட்ச வயதெல்லை பிரயோகிக்கப்படமாட்டாது.

### 5.நிகழ்ச்சித்திட்ட ஒருங்கிணைப்பு அலுவலர் (JM 1-1) பதவிகளின் எண்ணிக்கை: 05

**தகுதிகள்**
**வெளிவாரி விண்ணப்பதாரர்கள்**

(அ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட உள்நாட்டு அல்லது வெளிநாட்டு பல்கலைக்கழகமொன்றில் இளநிலைப் பட்டம் (Bachelor Degree) பெற்று சம்பந்தப்பட்ட துறை தொடர்பான இரண்டு (02) வருட அனுபவமும் பெற்றிருத்தல்.

**உள்வாரி விண்ணப்பதாரர்கள**
**(கீழே குறிப்பிடப்பட்ட 01 அல்லது 02)**

(01) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட உள்நாட்டு அல்லது வெளிநாட்டு பல்கலைக்கழகமொன்றில் இளநிலைப் பட்டம் (Bachelor Degree) பெற்றிருத்தல்

மற்றும

மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவில் குறைந்தபட்சம் இரண்டு (02) வருட நிரந்தர சேவையில் திருப்திகரமான சேவைக்காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல்

(02) மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவில் முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்பம்/ தொழில்நுட்பம் அல்லாத) (MA 1) பிரிவு தரம் II இலுள்ள சம்பந்தப்பட்ட துறைக்கான பதவியில் குறைந்தபட்சம் ஐந்து (5) வருட திருப்திகரமான சேவைக்காலத்தை பூர்த்தி செய்திருத்தல்.

**பிற தகுதிகள் (பதவிக்குப் / சேவைக்குப் பொருத்தமான பிற தகுதிகள்)**

தாய்மொழி மற்றும் ஆங்கில மொழியை பிரயோகிக்கக்கூடிய ஆற்றல், கணினியைப் பிரயோகிக்கக்கூடிய ஆற்றல் Word Processing, Spread Sheet, Presentation ஆகிய மென்பொருட்களைப் பயன்படுத்தக்கூடிய ஆற்றல், மின்னஞ்சலூடாக தொடர்பாடல் மேற்கொள்ளக்கூடிய ஆற்றல்.

**சம்பள அளவை:**
ரூ. 72,650 – 10×1,360 – 18×2,040 – ரூ.122,970 (2025.04.01 முதல் நடைமுறைக்கு வரும் முகாமைத்துவ சேவைகள் திணைக்கள சுற்றறிக்கை 01/2025 இற்கு அமைய இச்சம்பளம் வழங்கப்படும். 2025.04.01 திகதியன்று பெறும் மாத சம்பளம்: ரூ.58,615)

**வயதெல்லை:**
22 வயதுக்கு குறையாத 35 வயதுக்கு மேற்படாமல் இருக்க வேண்டும். உள்வாரி விண்ணப்பதாரர்களுக்கு அதிகபட்ச வயதெல்லை பிரயோகிக்கப்படமாட்டாது.

**ஆட்சேர்ப்பு முறை**
நிறுவனங்களின் பணிப்பாளர்கள் சபையால் நிர்ணயிக்கப்பட்டபடி, உள்வாரி விளம்பரம் மூலம் விண்ணப்பங்கள் கோரப்பட்டு எழுத்துமூல போட்டிப் பரீட்சை மற்றும்/அல்லது நியமனம் செய்யும் அதிகாரசபை நியமிக்கின்ற குழுவால் நடாத்தப்படும் கட்டமைக்கப்பட்ட நேர்காணலின் முடிவுகளின் அடிப்படையில் ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படும்.

### 6. தகவல் தொழில்நுட்ப அலுவலர் (MA-3) பதவிகளின் எண்ணிக்கை 01

**தகுதிகள்**
(அ)
(i)இலங்கை பாராளுமன்ற சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட அல்லது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட உள்நாட்டு அல்லது வெளிநாட்டு பல்கலைக்கழகமொன்றில் தகவல் தொழில்நுட்பம் தொடர்பான இளநிலைப் பட்டம் (Bachelor Degree) பெற்றிருத்தல

அல்லது

(ii)மேற்குறிப்பிடப்பட்ட விடயத்துறைக்கு தொடர்புடைய பட்டய தொழில்முறை தகுதிகளை விருதளிக்கும் நிறுவகத்திலிருந்து இணை அங்கத்துவத்தைப் பெற்றிருத்தல்.

அல்லது

(iii) தகவல் தொழில்நுட்பம் தொடர்பான உயர் தேசிய டிப்ளோமா/ தகவல் தொழில்நுட்பம் தொடர்பான பெற்றுக்கொண்ட NVQ மட்டம் 06 இற்குக் குறையாத தேர்ச்சிச் சான்றிதழுடன் அரச அல்லது தனியார் துறை நிறுவகமொன்றில் எட்டு (08) வருடத்திற்கு குறையாத அனுபவம் பெற்றிருத்தல்

**பிற தகுதிகள் (பதவிக்குப / சேவைக்குப் பொருத்தமான பிற தகுதிகள்)**

தாய் மொழி மற்றும் ஆங்கில மொழியை நன்றாகப் பிரயோகிக்கக்கூடிய ஆற்றல்

மேலதிக தகுதிகள்

கணினி வலையமைப்புச் சூழலில் கணினி மென்பொருள் வடிவமைப்பு, நிரலாக்கம் மற்றும் மேம்பாடு பற்றிய அறிவு

1. Experience in gathering and analyzing system requirements.
2. Sound knowledge of software design patterns and OOP concepts.
3. Familiarity with Agile methodologies.
4. Proven experience troubleshooting and resolving integration issues. Debugging, identifying bugs and driving them to closure by working closely with the development team
5. Experience with MS SQL Server technologies.
6. Familiarity with Git and version control workflows.
7. Experience with third-party libraries and APIs.
8. Strong problem-solving, analytical, and troubleshooting skills.
9. Excellent communication and teamwork abilities.
10. Knowledge on dynamic website development and maintenance using PHP, MYSQL and Content Management Systems (CMS)

**சம்பள அளவை:**
ரூ. 53,940 - 10X800 - 11X1,190 - 10X1,320 - 05 X1,350- ரூ 94,980
(2025.04.01 முதல் நடைமுறைக்கு வரும் முகாமைத்துவ சேவைகள் திணைக்கள சுற்றறிக்கை 01/2025 இற்கு அமைய இச்சம்பளம் வழங்கப்படும். 2025.04.01 திகதியன்று பெறும் மாத சம்பளம்: ரூ. 45,722)

**வயதெல்லை:**
22 வயதுக்கு குறையாத 35 வயதுக்கு மேற்படாமல் இருக்க வேண்டும். உள்வாரி விண்ணப்பதாரர்களுக்கு அதிகபட்ச வயதெல்லை பிரயோகிக்கப்படமாட்டாது.

### 7. அபிவிருத்தி அலுவலர் (MA - 3) - பதவிகளின் எண்ணிக்கை 09

**தகுதிகள்**
**வெளிவாரி விண்ணப்பதாரர்கள்**

இலங்கை பாராளுமன்ற சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட அல்லது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட உள்நாட்டு அல்லது வெளிநாட்டு பல்கலைக்கழகமொன்றில் தகவல் தொழில்நுட்பம் தொடர்பான இளநிலைப் பட்டம் (Bachelor Degree) பெற்றிருத்தல்

பிற தகுதிகள் (பதவிக்குப்/ சேவைக்குப் பொருத்தமான பிற தகுதிகள்)

தாய்மொழி மற்றும் ஆங்கில மொழியை பிரயோகிக்கக்கூடிய ஆற்றல், கணினியைப் பிரயோகிக்கக்கூடிய ஆற்றல் Word Processing, Spread Sheet, Presentation ஆகிய மென்பொருட்களைப் பயன்படுத்தக்கூடிய ஆற்றல், மின்னஞ்சலூடாக தொடர்பாடல் மேற்கொள்ளக்கூடிய ஆற்றல்.

சம்பள அளவை: ரூ. 53,940 - 10X800 - 11X1,190 - 10X1,320 - 05 X1,350- ரூ 94,980
(2025.04.01 முதல் நடைமுறைக்கு வரும் முகாமைத்துவ சேவைகள் திணைக்கள சுற்றறிக்கை 01/2025 இற்கு அமைய இச்சம்பளம் வழங்கப்படும். 2025.04.01 திகதியன்று வழங்கப்படும் மாத சம்பளம்: ரூ. 45,722)

வயதெல்லை:
22 வயதுக்கு குறையாத 35 வயதுக்கு மேற்படாமல் இருக்க வேண்டும். உள்வாரி விண்ணப்பதாரர்களுக்கு அதிகபட்ச வயதெல்லை பிரயோகிக்கப்படமாட்டாது

### 8.கணினி பிரயோகங்கள் உதவியாளர் (MA 2-2) - பதவிகளின் எண்ணிக்கை 01

**தகுதிகள்**

கணினி சொல் செயலாக்கம், தரவுத்தள முகாமை, கணினி வரைபடம், விரிதாள் முகாமை, கணினி அச்சிடுதல் மற்றும் புள்ளிவிபர மென்பொருள் ஆகியவற்றில் தேசிய தொழிற்திறன் தகுதி மட்டம் 5 (NVQ Level 05) இற்குக் குறையாத சான்றிதழைப் பெற்றிருக்க வேண்டும்.

அல்லது

மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவில் பதிவுசெய்யப்பட்ட பயிற்சி நிறுவகத்திலிருந்து மேலே குறிப்பிடப்பட்டுள்ள பாடங்களை உள்ளடக்கிய 720 மணிநேரங்களுக்குக் குறையாத ஒரு பாடநெறியை வெற்றிகரமாக முடித்திருக்க வேண்டும்.

**தொழில்நுட்ப திறன்கள்/தேர்ச்சி (அனுபவம்)**
கணினி சொல் செயலாக்கம், தரவுத்தள முகாமை, கணினி வரைபடம், விரிதாள் முகாமை, கணினி அச்சிடுதல் மற்றும் புள்ளிவிபர மென்பொருள் ஆகியவற்றை உள்ளடக்கிய தேசிய தொழிற்திறன் தகுதி (NVQ) மட்டம் 5 இற்குக் குறையாத ஒரு தொழில்நுட்பப் பாடநெறியை வெற்றிகரமாக முடித்திருக்க வேண்டும்.

**சம்பள அளவை:**
ரூ. 50,540 -10X540 - 07X630 - 04X1,080- 20X1,280 - ரூ90,270
(2025.04.01 முதல் நடைமுறைக்கு வரும் முகாமைத்துவ சேவைகள் திணைக்கள சுற்றறிக்கை 01/2025 இற்கு அமைய இச்சம்பளம் வழங்கப்படும். 2025.04.01 திகதியன்று பெறும் மாத சம்பளம்: ரூ. 43,379)

**வயதெல்லை:**
18 வயதுக்கு குறையாத 35 வயதுக்கு மேற்படாமல் இருக்க வேண்டும். உள்வாரி விண்ணப்பதாரர்களுக்கு அதிகபட்ச வயதெல்லை பிரயோகிக்கப்படமாட்டாது

### 9. முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்பம் அல்லாத) (MA 1-2) - பதவிகளின் எண்ணிக்கை 06

**தகுதிகள் (கட்டாய பொதுத் தகுதிகள்)**
**வெளிவாரி விண்ணப்பதாரர்கள**
**(அ) முகாமைத்தவ உதவியாளர் - 05**

(i) க.பொ.த (சா/த) இல் சிங்களம்/ தமிழ் மொழி, ஆங்கிலம் மற்றும் கணிதம் உட்பட நான்கு பாடங்களில் விசேட சித்தியுடன் ஆறு பாடங்களில் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாமல் சித்தி பெற்றிருக்க வேண்டும்.

மற்றும்

(ii)க.பொ.த. (உ/த) இல் அனைத்து பாடங்களிலும் (சாதாரண பொதுப் பரீட்சையைத் தவிர) ஒரே அமர்வில் சித்தி பெற்றிருக்க வேண்டும்.

**முகாமைத்துவ உதவியாளர் (சராப்பு) – பதவிகளின் எண்ணிக்கை 01**

(i) க.பொ.த (சா/த) இல் சிங்களம்/ தமிழ் மொழி, ஆங்கிலம் மற்றும் கணிதம் உட்பட நான்கு பாடங்களில் விசேட சித்தியுடன் ஆறு பாடங்களில் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாமல் சித்தி பெற்றிருக்க வேண்டும்.

மற்றும்

(ii) க.பொ.த. (உ/த) வர்த்தகப் பிரிவில் அனைத்து பாடங்களிலும் (சாதாரண பொதுப் பரீட்சையைத் தவிர) ஒரே அமர்வில் சித்தி பெற்றிருக்க வேண்டும்.

**உள்வாரி விண்ணப்பதாரர்கள்**

(அ) ஆரம்ப - திறன் சாராத, அரைத் திறன் மற்றும் திறன் சேவை பிரிவுகளிலுள்ள (ஆ), (இ) மற்றும் (உ) இல் குறிப்பிடப்பட்ட பின்வரும் தகுதிகளைக் கொண்ட பணியாளர்கள் இதற்கு விண்ணப்பிக்கலாம்.

(ஆ) க.பொத. (சா/த) பரீட்சையில்
(i) சிங்களம்/ தமிழ்
(ii) கணிதம்
(iii)ஆங்கிலம் (உரிய காரியங்களை ஆற்றுவதற்கு தேவைப்படும் என்றால் மட்டும்) ஆகிய பாடங்கள் உள்ளடங்கலாக நான்கு (04) பாடங்களில் விசேட சித்தி உள்ளடங்கலாக ஆறு (06) பாடங்களில் ஒரே அமர்வில் சித்தி பெற்றிருக்க வேண்டும்.
(இ) கணினி அறிவு தொடர்பான தேசிய தொழிற்திறன் தகுதி மட்டம் 3 (NVQ 3) சான்றிதழைப் பெற்றிருக்க வேண்டும்.
(ஈ) பணியில் நிரந்தரமாக்கப்பட்டிருக்க வேண்டும்.
(உ) உரிய திகதிக்கு முன்னதாக நிரந்தர நியமனத்தில் 05 ஆண்டுகள் தொடர்ச்சியான திருப்திகரமான சேவைக் காலத்தை முடித்திருக்க வேண்டும்.

சம்பள அளவை: ரூ. 46,220 - 10X540 - 07X630 – 12X1,080 - 12X1,280 - ரூ.84,350
(2025.04.01 முதல் நடைமுறைக்கு வரும் முகாமைத்துவ சேவைகள் திணைக்கள சுற்றறிக்கை 01/2025
இற்கு அமைய இச்சம்பளம் வழங்கப்படும். 2025.04.01 திகதியன்று பெறும் மாத சம்பளம்: ரூ.40,403)

**வயதெல்லை:**
18 வயதுக்கு குறையாத 30 வயதுக்கு மேற்படாமல் இருக்க வேண்டும். உள்வாரி விண்ணப்பதாரர்களுக்கு அதிகபட்ச வயதெல்லை பிரயோகிக்கப்படமாட்டாது
(மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை அல்லது உள்வாரி விண்ணப்பங்களுக்கு ஆட்சேர்ப்பு செய்யும் சந்தர்ப்பங்களில் அதிகபட்ச வயதெல்லை பிரயோகிக்கப்படமாட்டாது)

**மற்றவை**
ஒவ்வொரு தேர்வுநாடியும்,
அ. இலங்கைப் பிரஜையாக இருக்க வேண்டும்
ஆ. பதவிக்கு ஒதுக்கப்பட்ட கடமைகளைச் செய்வதற்கும் நாட்டின் எந்தப் பாகத்திலும் பணியாற்றுவதற்கும் உடல் ரீதியாகவும் மன ரீதியாகவும் தகுதியுடையவராக இருக்க வேண்டும்
இ. சிறந்த குணமுள்ளவராக இருக்க வேண்டும்

### பொது விடயங்கள்
அ. உங்கள் சம்பளத்தில் 8☐ ஊழியர் சேமலாப நிதியத்துக்கு நீங்கள் செலுத்த வேண்டியுதுடன் இவ் ஆணைக்குழு உங்கள் சம்பளத்தில் 12☐ க்கு சமமான தொகையை ஊழியர் சேமலாப நிதியத்துக்கும் மற்றும் 3☐ க்கு சமமான தொகையை ஊழியர் நம்பிக்கை நிதியத்துக்கும் செலுத்தும்.
ஆ. மேற்கண்ட அடிப்படை சம்பளத்திற்கு மேலதிக, அரசாங்கத்தால் அனுமதிக்கப்பட்ட பிற கொடுப்பனவுகளுக்கும் நீங்கள் உரித்துடையவர்கள்
இ. இந்தப் பதவி நிரந்தரமானது மற்றும் தகுதிகாண் காலத்திற்கு உட்பட்டது.
ஈ. ஆட்சேர்ப்பு திட்டங்களைத் திருத்தும் போது ஏற்படக்கூடிய திருத்தங்களுக்கு உட்பட்டது
உ. விண்ணப்பங்களை சமர்ப்பிக்கும் போது சமர்ப்பிக்கப்படவேண்டிய சான்றிதழ்களின் சான்றளிக்கப்பட்ட நகல்களை விண்ணப்பங்களுடன் சமர்ப்பிக்க வேண்டும்.

**TVEC இணைய தளத்திலுள்ள விண்ணப்பப் படிவத்திற்கு அமைய** சுயமாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பம் 2025.09.02 திகதிக்கு முன்பு பதிவுத் தபாலில் பின்வரும் முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும். ஏற்கனவே பணியில் உள்ள விண்ணப்பதாரர்கள் தங்கள் விண்ணப்பங்களை நிறுவனத் தலைவர்களினூடாக அனுப்ப வேண்டும், மேலும் அவர்கள் சேவையிலிருந்து விடுவிக்கப்படுவதற்கு உடன்படுகிறார்களா என்பதை தெளிவாகக் குறிப்பிட வேண்டும். விண்ணப்பிக்கின்ற பதவியை கடித உறையின் மேல் இடது பக்க மூலையில் தெளிவாகக் குறிப்பிட வேண்டும். தாமதமாக, முழுமையடையாமல் அல்லது தெளிவற்றதாகப் பெறப்படும் விண்ணப்பங்கள் எந்த அறிவித்தலும் இன்றி நிராகரிக்கப்படும்.

பணிப்பாளர் நாயகம்,
மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழு,
“நிபுணதா பியச” 03ஆம் மாடி,இல.354/2, எல்விட்டிகல மாவத்தை,
கொழும்பு 05.